# <u>அறிவியல் வளர்ச்சியினால் பாதிப்புகளே அதிகம்</u>
## <u>வாதக் கட்டுரை</u>

அறிவியல் வளர்ச்சியினால் உலகமே பல ____________________ கண்டுள்ளது என்று ஆணித்தரமாகக் கூறலாம். இருப்பினும், இத்தகைய அதிவேக வளர்ச்சியினால் பாதிப்புகளும் அதிகமாகின்றன. அறிவியல் வளர்ச்சியினால் ____________ அதிகம் என்பதில் சிறிதளவும் ஐயமுமில்லை.

அறிவியல் வளர்ச்சியினால் மக்களிடையே ________ பழக்கம் குறைந்து கொண்டே வருகின்றன. சமூக ஊடகங்களின் ஆதிக்கம் அதிகரிப்பதனால் மாணவர்கள் கல்வியில் பின் தங்குகின்றனர். தனி மனிதனின் ___________ ஆற்றல் குறைந்து கொண்டே வருகின்றன.

அறிவியல் வளர்ச்சியினால் ___________________ அதிகமாகத் தயாரிக்கப்படுகின்றன. இதனால், இளைய சமுதாயத்திற்கு வேலை வாய்ப்புகள் பறிபோகின்றன. வேலை வாய்ப்புகள் இல்லாததால் இளைஞர்கள் புகைப்பிடித்தல், போதைப் பொருள் உட்கொள்ளுதல் மற்றும் ________________ போன்ற பல சமூகச் சீர்கேடு பிரச்சனைகளில் ஈடுபடுகின்றனர்.

அதோடு மட்டுமல்லாது, அறிவியல் வளர்ச்சியினால் பல செயற்கை அழகு சாதனங்கள் உருவாக்கப்படுகின்றன. மக்கள் அதில் அதிகம் _______________ அப்பொருள்களை வாங்கிப் பயன்படுத்துவதால் பல நோய்களுக்குப் பலியாகின்றனர். மக்களிடையே தோல் வியாதி, _______________ மற்றும் உடல் பருமன் போன்ற நோய்கள் ஏற்பட்டு உடல் நலம் குறைந்து வருகின்றன.

இறுதியாக, அறிவியல் வளர்ச்சிகளால் பல பாதிப்புகள் _________________ என்பது வெள்ளிடைமலை. எனவே, அதன் நன்மை ______________ அறிந்து ஆக்கப்பூர்வமாகச் செயல்படுவது நமது கடமையாகும்.

| | | | | |
|---|---|---|---|---|
| மேம்பாடுகளைக் | புற்று நோய் | உருவாகின்றன | தீமைகளை | வாசிக்கும் |
| இயந்திரங்கள் | சிந்தனை | பாதிப்புகளே | திருடுதல் | ஈர்க்கப்பட்டு |

LIVEWORKSHEETS